# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of the Principal Sessions Judge, Virudhunagar District at Srivilliputtur.

S.C.No40/2022

Deposition of witness for Prosecution/Defence/Court : P.W.4

(Accused present)

| | | | |
|---|---|---|---|
| Name | : பாண்டீஸ்வரி | Caste | : |
| Father's Name | : | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the 18th day of March, 2024.

முதல் விசாரணை

நான் தற்போது டபிள்யூ புதுப்பட்டியில் வசித்து வருகிறேன். என்அப்பா ஆர்.ஆர் நகரில் விறகு வெட்டும் வேலை பார்த்து வருகிறார். ஆஜர் எதிரி என் அப்பா உடன் பிறந்த சகோதிரியின் மகன் என்ற முறையில் எனக்கு அத்தை மகன் ஆவார். வழக்கில் இறந்துபோனவர் செல்வகணேஷ், அவருக்கும் எனக்கும் திருமணம் நிச்சயம் செய்யப்பட்டது. அவ்வாறு நிச்சயம் ஆவதற்கு முன்பு என்னை ஆஜர் எதிரிக்கு பெண் கேட்டார்கள், ஆனால் அப்போது எனக்கு 13 வயதே நிரம்பியிருந்ததால் எங்கள் வீட்டில் மறுத்துவிட்டனர். அதனால் அவருக்கும் அவர் வீட்டின் அருகில் வசித்து வந்த பாண்டியம்மாள் என்பவருக்கும் திருமணம் நடைபெற்றது. அவர்கள் இருவரும் 1 வருடம் சேர்ந்து வாழந்தநிலையில் இருவருக்கும் கருத்துவேறுபாடு ஏற்பட்டு பிரிந்து விட்டனர். அதற்கு பின்னர் ஆஜர் எதிரிக்கு என்னை இரண்டாம் தாரமாக பெண் கேட்டார்கள். எனது பெற்றோர்கள் அதன்பிறகு ஆஜர் எதிரிக்கு

வளையங்குளத்தை சேர்ந்த மகேஷ்வரி என்பவருடம் இரண்டாம் திருமணம் நடந்தது. எனக்கு வழக்கில் இறந்துபோன செல்வகணேசுடன் திருமணம் முடிப்பற்கு ஊர் பெரியவர்கள் முன்னிலையில் பேசி முடிவு செய்து 13.10.2021ம் தேதி நிச்சயம் நடைபெற்றது. அவ்வாறு நிச்சயம் நடைபெற்ற பின்னர் செல்வகணேஷ், அவர் வைத்திருந்த டச் செல்போனை என்னிடம் கொடுத்துவிட்டு அவர் பட்டன் செல்போன் வைத்திருந்தார். நாங்கள் இருவரும் போனில் பேசிக்கொள்வோம். தீபாவளி சமயம் மேற்படி செல்வகணேஷ் எங்கள் வீட்டிற்கு வந்தார், அவருடன் சேர்ந்து நாங்கள் தீபாவளி கொண்டாடினோம். வழக்கில் இறந்துபோன செல்வகணேஷின் பாட்டிக்கு உடல்நலக்குறைவு ஏற்பட்டதால் உடனடியாக திருமணம் முடிக்க வேண்டுமென்று நானும், எனது பெற்றோர்களும், செல்வகணேஷ் வீட்டிற்கு 2021ம் ஆண்டு ஐப்பசி மாதம் ஆங்கிலத் தேதிக்கு 6ம் நாள் சென்றோம். கார்த்திகை மாதம் இருவருக்கும் திருமணம் முடிக்கலாம்என்று பேசிமுடித்துவிட்டு செல்வகணேஷின் பாட்டியை பார்த்துவிட்டு நானும்,. செல்வகணேசும் அவருடைய இருசக்கர வாகனத்திலும், எனது பெற்றோர்கள் வேறொரு இருசக்கரவாகனத்தில் டபிள்யூ புதுப்பட்டி திரும்பி விட்டோம். அன்று இரவு செல்வகணேஷ் எங்கள் வீட்டிலேயே தங்கிவிட்டார். மறுநாள் 07.11.2021ம் தேதி காலையில் எனது பெற்றோர்கள், சித்தப்பா மற்றும் வீட்டில் உள்ள ஆண்கள் அனைவரும் செல்வகணேஷை அழைத்துக்கொண்டு காட்டிற்கு சமைத்து சாப்பிட்டுவிட்டு வரச் சென்றார்கள். நான் வீட்டிலேயே இருந்துவிட்டேன். எனது பெற்றோர்கள் காட்டிற்கு சென்றுவிட்டு அன்று மதியம் 12.00 மணிக்கு திரும்பிவிட்டனர். செல்வகணேஷ் மாலை 04.00 மணிக்கு வந்தார். எங்கள் வீட்டில் அவருக்கு சாப்பாடு கொடுத்துவிட்டு அவர் எங்களிடம் மறுநாள் வேலைக்கு செல்லவேண்டும் என்றும், எனவே ஊருக்கு செல்வதாகவும் கூறி மாலை 05.00 மணிக்கு சென்றார். நான் இடையில் அவருக்கு போன் செய்து பேசினேன்,

அப்போது அவர் பெட்ரோல் பல்கில் தனது இருசக்கரவாகனத்திற்கு பெட்ரோல் போட்டுக்கொண்டிருப்பதாக சொன்னார். பின் 06.15 மணியளவில் மீண்டும் போன் செய்தபோது செல்வகணேஷ் செங்குன்றாபுரத்தை நெருங்கிவிட்டதாக என்னிடம்சொன்னார். அதன்பிறகு சிறிது நேரம் கழித்து நான் செல்வகணேஷின் செல்போனிற்கு போன் செய்ததற்கு சுவிட்ஆப் என்று வந்தது. நான் செல்வகணேஷ் அலுப்பில் உறங்கியிருப்பார் என்று நினைத்துக்கொண்டு இருந்துவிட்டேன். மறுநாள் 08.11.2021ம் தேதி காலையில் செல்வகணேஷின் தாயாருக்கு போன் செய்தேன். அவர் செல்வகணேஷ் சொந்தக்காரர்கள் வீட்டிற்கு சென்றிருப்பான் என்றும், வீட்டிற்கு வந்தவுடன் போன் பண்ண சொல்கிறேன் என்றும் என்னிடம் சொன்னார். அன்று காலை 07.30 மணிக்கும், மீண்டும் 08.00 மணிக்கும் செல்வகணேஷின் தம்பி நாகராஜ் என்னை தொலைபேசியில் தொடர்புகொண்டு முதலில் எரிச்சநத்தம் அருகில் உள்ள கோட்டை மாரியம்மன் கோவில் அருகில் ஒரு நபர் தீப்பிடித்து இறந்துகிடப்பதாக தெரிவித்தார், பின்னர் இரண்டாவதாக தொடர்புகொண்டு அது செல்வகணேஷ் தான் என்று சொன்னார். உடனே ஆர். ஆர் நகரில் என் பெற்றோருக்கு செல்வகணேஷ் தீப்பிடித்து இறந்துகிடந்த விவரத்தை நாகராஜ் என்னிடம் தெரிவித்ததாக சொன்னேன், அவர்கள் அங்கிருந்து வந்துவிட்டார்கள், நானும் சென்றுவிட்டேன். நாங்கள் சென்றபோது செல்வகணேஷின் உடலை விருதுநகர் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றுவிட்டார்கள். அதற்கு மறுநாள் எம்.புதுப்பட்டி காவல்நிலையத்தில் விசாரணைக்காக என்னை அழைத்துச்சென்றார்கள். செல்வகணேஷின் தம்பி நாகராஜ் நடந்த சம்பவத்திற்கு புகார் கொடுத்ததை தெரிந்துகொண்டேன். மீண்டும் 2 நாட்கள் கழித்து விசாரணைக்கு சென்றபோது, என் சித்தி மகன் முனியாண்டி ஆஜர் எதிரி, செல்வகணேஷ் உடன் சம்பவத்தன்று இருசக்கரவாகனத்தில் பயணம் செய்ததை எங்கள் ஊர் ரேனுகா பள்ளி

வளைவில் வைத்து பார்த்ததாக என்னிடம் சொன்னான். நான் அவனிடம் முதலிலேயே சொல்லியிருக்க வேண்டியது தானே என்று சொன்னேன். விசாரித்தததில் ஆஜர் எதிரி தான் செல்வகணேஷை கொன்றதாக கேள்விப்பட்டேன். இது சம்மந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரி தரப்பு குறுக்குவிசாரணை</u>

என்னை ஆஜர் எதிரிக்கு பெண் கேட்டார்கள் என்றும், ஆனால் அப்போது எனக்கு 13 வயதே நிரம்பியிருந்ததால் எங்கள் வீட்டில் மறுத்துவிட்டனர் என்ற விவரத்தை போலீஸ் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். இறந்தநபருக்கும் எனக்கும் 19 வயது முடிந்த பிறகு தான் நிச்சயம் நடந்தது என்றால் சரிதான். ஆஜர் எதிரி 13 வயதான என்னை பெண் கேட்டதாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. ஆஜர் எதிரிக்கு வேறு பெண்ணுடன் திருமணம் முடிந்து விவாகரத்து ஆன பின்பும் மீண்டும் என்னை பெண் கேட்டார் என்று வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல, பெண் கேட்டார் நான் முடியாது என்று சொல்லிவிட்டேன். அவ்வாறு பெண் கேட்டு நான் முடியாது என்ற விவரத்தை போலீஸ் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் எனது பெற்றோர்களிடம் கேட்ட பிறகு என்னிடம் கேட்டார் என்று சொல்லியுள்ளேன். என் சித்தி மகன் சம்பவத்தின்போது 6ம் வகுப்பு படித்து வந்தான். அவர் வீடும் என் வீடும் ஒரே தெருவில் சுமார் 10, 20 வீடுகள் தள்ளி இருக்கும். என் சித்தி மகன் முனியாண்டியிடம் கேட்ட விவரத்தை நானாக கேட்கும் வரை அவன் யாரிடமும் சொல்லவில்லை என்றால் சரிதான். சம்பவம் நடந்த 08.11.2021ம் தேதி காலையில் 09.00 மணிக்கு எங்களை எம்.புதுப்பட்டி காவல்நிலையத்திற்கு அழைத்துச்சென்றுவிட்டார்கள். நாங்கள் சென்ற சிறிது நேரத்திலேயே எம்.புதுப்பட்டி காவல்நிலையத்திற்கு புகார் கொடுத்த நாகராஜ், அவரது மாமா தன்னாசி ஆகியோர் வந்துவிட்டனர். எங்கள் அனைவரிடமும் போலீஸார்

விசாரணை செய்தனர். அப்போது நாங்கள் செல்வகணேஷை யார் கொன்றார்கள் என்ற விவரம் தெரியாது என்று சொன்னோம். புகார் கொடுத்த நாகராஜ், அவரது மாமா தன்னாசி ஆகியோர் என்னிடம் எங்கள் ஊர்காரர் தான் யாரோ கொலை செய்திருக்கவேண்டும் என்று தான் சொன்னார்கள், காவல்நிலையத்திலும் அதை தான் சொன்னார்கள். நான் இறந்துபோன செல்வகணேசிற்கு 2 முறை போன் செய்தபோதும் அவர் ஆஜர் எதிரியுடன் இருந்ததாக அவர் சொல்லவில்லை. என் சித்தி மகன் முனியாண்டி பள்ளிக்கோ, அல்லது விளையாட போகவேண்டும் என்றாலோ எங்கள் வீட்டின் வழியாகத்தான் செல்லவேண்டும். சம்பவம் நடந்து 3 நாட்களாக முனியாண்டி அவனுக்கு தெரிந்த விவரத்தை யாரிடமும் சொல்லவில்லை. என் சித்தி மகன் முனியாண்டி சம்பவத்தன்று இறந்துபோன செல்வகணேஷ் ஆஜர் எதிரியுடன் இருசக்கரவாகனத்தில் சென்றதாக என்னிடம் சொல்லவில்லை என்றால் சரியல்ல. என் சித்தி மகன் முனியாண்டி ரேணுகா பள்ளி வளைவில் செல்வகணேஷ் ஆஜர் எதிரியுடன் இருசக்கரவாகனத்தில் சென்றதாக என்னிடம் சொன்ன விவரத்தை போலீஸார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். காவல்நிலையத்தில் இருக்கும் போது செல்வகணேசின் மாமா தன்னாசி செல்வகணேஷ் ஆஜர் எதிரியுடன் இருசக்கரவாகனத்தில் சென்ற விவரத்தை சொன்னாரா என்றால் சொல்லவில்லை. செல்வகணேஷை ஆஜர் எதிரி தான் கொன்றார் என்று எதை வைத்து சொல்கிறேன் என்றால் காவல்நிலையத்தில் போலீஸார் சொன்னதன் அடிப்படையில் சொல்கிறேன். நான் முதல் விசாரணையில் சொன்னமாதிரி எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றும், போலீஸார் சொல்லிக்கொடுத்தன் அடிப்படையிலும், இறந்துபோன செல்வகணேஷின் வீட்டார் கேட்டுக்கொண்டதற்கிணங்கவும் சாட்சியம் அளிக்கிறேன் என்றநால் சரியல்ல. கோட்டையூர் பெட்ரோல் பல்கில் இருந்த சி சி டி வி கேமராவை பார்த்து

கண்டுபிடித்ததாக போலீஸார் சொன்னதாக சொன்னார்கள். மேற்படி விவரத்தை போலீஸார் சொன்னேனா என்றால் சொல்லவில்லை. என் செல்போனை போலீஸார் விசாரணைக்காக எடுத்துச்சென்றார்கள், திருப்பி என்னிடம் கொடுக்கவில்லை. என் செல்போனை போலீஸார் விசாரணைக்காக எடுத்துச்சென்ற விவரத்தை ஆய்வாளர் விசாரணையில் சொன்னேனா என்றால் சொன்னேன். என்னிடம் செல்போனும் கைப்பற்றப்படவில்லை என்றாலும், என்னிடம் இருந்து எந்த செல்போனும் கைப்பற்றப்படவில்லை என்றாலும் சரியல்ல.

<u>மறுவிசாரணை – இல்லை.</u>